# அரசியல் கட்சி



© www.e-thaksalawa.moe.gov.lk

**தேர்ச்சி 2.0: அரசறிவியல் பாடத்துறையில் உள்ளடங்கும் கருப்பொருட்களை அறிந்து கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 2.4.2: சமூகத்தில் அரசியல் வாழ்வில் அரசியல் கட்சி பற்றி விமர்சிப்பார்.**



## அரசியல் கட்சி

- நவீன ஜனநாயக அரசியலில் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாக அரசியல் கட்சி உள்ள போதும் இவற்றிற்கு நீண்ட வரலாறு இல்லை. 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பின்னர் 20 ஆம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியிலேயே இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் தோற்றம் பெற்றது.
- அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுவதற்கு **பிரதிநிதித்துவ ஜனநாயக முறையின் பரம்பல், வாக்குரிமை பரவலடைந்தமை** ஆகிய இரண்டு காரணிகள் பங்காற்றின.

அரசியல் கட்சிகளானது தேர்தல் அல்லது வேறு ஊடகத்தின் ஊடாக அரசாங்க அதிகாரத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கினைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனமாகும்.

### என்ரு ஹேவுட் என்பவரின் அரசியல் கட்சிகளின் பண்புகள்

**01** அரசியல் கட்சிகள் அரசியல் அதிகாரத்தை பெற்றுக்கொள்வதன் மூலம் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தவே முயற்சிக்கும்.

**02** அரசியல் கட்சிகள் அங்கத்துவ அட்டைகளைக் கொண்ட ஒழுங்கமைக்கப்பட்ட பிரிவாகும்.

**03** அரசியல் கட்சிக்கு கொள்கை ரீதியாக மற்றும் கருத்தியல் ரீதியாக அடையாளங்கள் காணப்படல்.

**04** அரசாங்க கொள்கைகளுக்கு ஏற்புடைய விடயங்கள் பலவற்றில் அவதானம் செலுத்தும் தொகுதி ஒன்று இருத்தல்.

தொகுப்பு :- திருமதி.பா.ரஞ்சினி ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளீர் கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



# அரசியல் கட்சிகளை வகைப்படுத்தல்

## மொறிஸ்டுவேஜர் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு

- 01 உயர் குழாமை அடிப்படையாகக் கொண்ட கட்சி (காடர் கட்சி)
- 02 பொது மக்களை அடிப்படையாகக் கொண்ட கட்சி (மகாஜன கட்சி)

## அரசியல் கட்சிக்குரிய கொள்கை ரீதியாக மற்றும் கருத்தியல் அடையாளங்களின் அடிப்படையில்

- 01 வலதுசாரிக் கட்சி
- 02 இடதுசாரி கட்சி
- 03 மத்தியமயப்பட்ட
- 04 தேசியவாத கட்சி
- 05 நலன்புரி வாதம்
- 06 யாப்புசார் கட்சி
- 07 புரட்சிகரக் கட்சி

## ஒஸ்ரொகொஸ்கி என்பவரின் தாபனமூலங்களை அடிப்படையாகக் கொண்டு

- 01 பாராளுமன்றத்தின் ஊடாக தோன்றிய அரசியல் கட்சி
- 02 பாராளுமன்றத்திற்கு வெளியே தோன்றிய கட்சி.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.பா.ரஞ்சினி ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளீர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பொதுவான வகைப்படுத்தல்

- தனிக்கட்சி
- இருகட்சி
- ஆதிக்கமுள்ள தனிக்கட்சி
- ஆதிக்கமுள்ள இருகட்சி
- பலகட்சி

## அரசியல் கட்சியின் பணிகள்.

01 பிரதிநிதித்துவம்

02 உயர்குழாம் வகுப்பை உருவாக்குதல்

03 சமூகக் குழுக்களின் அரசியல் நோக்கங்களை உருவாக்குதல்

04 பொதுமக்களின் அரசியல் அபிலாசைகளை அரசியல் அரங்கிற்கு கொண்டு செல்லல்


05 பொதுமக்களை அரசியல் செயற்பாட்டிற்குள் கொண்டு வந்து தலைமைத்துவத்தை அளித்தல்

06 அரசாங்க விவகாரங்களை ஒழுங்கமைத்தல்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.பா.ரஞ்சினி ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளீர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk




- அரசியல் கட்சிகள் ஐரோப்பா, அமெரிக்கா போன்ற அபிவிருத்தி அடைந்த கைத்தொழில் முதலாளித்துவ தாராள அரசியல் முறை அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டிருக்க,
- பிரதிநிதித்துவ ஜனநாயகம் தொடர்பில் குறுகிய வரலாற்றை உடைய-தாகவும் குறைந்த கைத்தொழில் மயமாக்கல் நவீனத்துவத்திற்கு உட்பட்ட நாடுகளில் அரசியல் கட்சி வேறுபட்ட இயல்புகளைக் கொண்டு காணப்படுகின்றது.
- ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

தொகுப்பு :- திருமதி.பா.ரஞ்சினி ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளீர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**வினா - 01**

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அரசியல் கட்சிகள் தோற்றம் பெற இரு காரணங்கள் பாதிப்புச் செலுத்தின அவ்விரு காரணிகளையும் குறிப்பிடுக.

**வினா - 02**

அரசியல் கட்சிகளுக்கு பொருள் விளக்கத்தை முன்வைத்த பகுதியினரைக் குறிப்பிடுக.

**வினா - 03**

பண்புசார் அடிப்படையில் அரசியல் கட்சிகளை வகைப்படுத்துக.

**வினா - 04**

ஆதிக்கமுள்ள இருகட்சிக்கும், ஆதிக்கமுள்ள தனிக்கட்சிக்கும் உதாரணமாக அமையக்கூடிய நாட்டைக் குறிப்பிடுக.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



**வினா - 05**

’ஒரு பொதுக் கொள்கையின் கீழ் தேசிய நலனை மேம்படுத்தும் நோக்கில் ஒன்றிணைந்த மக்கள் கூட்டம்’, ‘வர்க்க உணர்வுடன் செயற்பட்டு பாட்டாளி வர்க்கத்தினை பலவந்த புரட்சிக்காக தயாரப்படுத்தும் முன்னணிப் படையாகும்’ இவ்விரு கூற்றுக்களுடன் தொடர்புடைய சிந்தனையாளர்கள்.



**வினா - 06**

‘நவீன ஜனநாயகத்தில் அரசியல் கட்சிகளின் பங்கு முக்கியத்துவமானது’ ஆராய்க.



தொகுப்பு :- திருமதி.பா.ரஞ்சினி ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளீர் கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk